# சாஸ்த்ரா பல்கலை.யில் மத்திய குழு ஆய்வு

தஞ்சை, ஜூலை 15: தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் உள்ள டைபாக்-கோர் பயிற்சி மையம் கடந்த 7 வருடமாக செயல்பட்டு வருகிறது. இந்த பயிற்சி மையத்தின் செயல்பாடுகள் குறித்து மத்திய அரசின் விஞ்ஞான தொழில் நுட்ப பிரிவின் ஆய்வுக்குழுவினர் நேற்று மதிப்பிட்டனர்.

பின் விஞ்ஞான ஆய்வு குழு தலைவர் சந்தரசேகர் கூறியது. இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் 2020ல் இந்தியா வல்லரசு ஆகுவதற்கு உலக தரம் வாய்ந்த அறிவியல் மையங்களை இந்தியாவில் உருவாக்க திட்டமிட்டார். இந்த அறிவியல் மையங்களை டைபாக்-கோர் என்று பெயரிட்டார். இந்தியாவிலேயே முதன் முதலாக சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் தான் டைபாக்-கோர் பயிற்சி மையம் தொடங்கப்பட்டது. இங்குள்ள நுண்ணிய வசதிகளை பயன்படுத்தி கம்ப்யூட்டர் மற்றும் அதைச் சார்ந்த தகவல் தொழில் நுட்ப துறைகளில் மேலாண ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் டைபாக்-கோர் தொடங்கப்பட்டதின் முக்கிய நோக்கமே இன்னும் 10 ஆண்டுகளில் கம்ப்யூட்டரின் செயல்பாடுகள் மிகவும் வேகமாக செயல்பட உள்ளது. அவ்வாறு செயல்படும் போது அதன் வளர்ச்சி மற்றும் எதிர்காலத்தில் நடக்கும் விஷயங்களை விஞ்ஞான தொழில் நுட்பத்தில் எவ்வாறு கணக்கிடுவது என்றும் தெரிந்துகொள்வதே ஆகும். சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் டைபாக்-கோர் பயிற்சி மையம் இந்தியாவிலேயே மிகவும் சிறப்பாக செயல்பட்டு முதல் தரமாக விளங்கி வருகிறது.

இந்தியாவில் உள்ள விமானங்கள் பழுதாகிவிட்டால் வெளிநாடுகளுக்கு அனுப்பி சரி செய்யப்படுகிறது. எனவே பழுதாகும் விமானங்களை இந்திய நாட்டிலேயே சரி செய்வதற்கு இன்ஜினியர்கள் உருவாக்க டைபாக்-கோர் பயிற்சி மையத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.